செ.வெ.எண்:51 நாள்:27.01.2018

திருநெல்வேலியில் "நெல்லை புத்தகத் திருவிழா - 2018" 03.02.2018 முதல் 11.02.2018 வரை பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் நடைபெறவுள்ளது.
புத்தகத் திருவிழா பிரச்சார வாகனத்தை தொடங்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆப., அவர்கள் தகவல்.

-----

திருநெல்வேலி பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் நேசனல் புக் டிராஸ்ட், மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ் வளர்ச்சி பண்பாட்டு மையம் சார்பில் "நெல்லை புத்தகத் திருவிழா விழிப்புணர்வு பிரச்சார வாகனம் துவக்க நிகழ்ச்சி இன்று (27.01.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆப., அவர்கள் கலந்து கொண்டு பிரச்சார வாகனத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலியில் "நெல்லை புத்தகத் திருவிழா - 2018" 03.02.2018 முதல் 11.02.2018 வரை பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் நடைபெறவுள்ளது. அறிவுக்கும், மனத்திற்கும், கண்ணுக்கும் விருந்தளிக்கும் வகையில் புத்தக திருவிழா நடைபெறவுள்ளது. இதில் 110 புத்தக கடைகள் அமைக்கப்படவுள்ளது. சுமார் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் வைக்கப்படவுள்ளது. 04.02.2018 அன்று காலை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் புத்தகத் திருவிழாவில் பள்ளி, கல்லூரி மாண, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளை தொடங்கி வைத்து பேருரையாற்றவுள்ளார்கள். தினசரி கலை நிகழ்ச்சிகளும், பட்டிமன்றம், கவியரங்கம், கவிதை வாசிப்பு உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளது. இந்த ஆண்டு புத்தகத் திருவிழாவிற்கு பெரிய அளவிலான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இன்று புத்தகத் திருவிழாவிற்கான பிரச்சார வாகனம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் விளம்பர பேனர்களும் வைக்கப்பட்டுள்ளது. ரேடியோ பாட்னர், வாட்சாப், பேஷ்புக் உள்ளிட்ட சோசியல் மீடியாக்கல் மூலமும் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. பள்ளி, கல்லூரிகளுக்கு சுத்தம் புத்தகம் தரும் போட்டிகள் அறிவிக்கப்பட்டுள்ளது. வளாக தூய்மை போட்டியில் வெற்றி பெறும் பள்ளி, கல்லூரிகளுக்கு ரூ.5 ஆயிரம் முதல் ரூ.12 ஆயிரம் வரையிலான புத்தகங்கள் பரிசு வழங்கப்படவுள்ளது. வாசிக்கும் பழக்கத்தினை மேம்படுத்தும் புத்தகத் திருவிழாவிற்கு திருநெல்வேலி மற்றும் அருகில் உள்ள மாவட்ட மக்கள் அதிக அளவில் வருகை தந்து அதிகமான புத்தகங்களை வாங்கி செல்ல வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., மாவட்ட நூலக அலுவலர் திரு.முனியப்பன், மாவட்ட மைய நூலகர் திரு.முத்துகிருஷ்ணன், பொதிகை தமிழ் சங்க தலைவர் கவிஞர் ராஜேந்திரன், எழுத்தாளர் திரு.நாறும்பூநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.